தீர்மான நகல்

30.06.2023

2023 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் வெள்ளி கிழமை காலை/மாலை 11-00 மணிக்கு தும்பலப்பட்டி ஊராட்சியின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

இடம் : ஊராட்சி மன்ற அலுவலகம் தும்பலப்பட்டி ஊராட்சி

வருகை : தலைவர் திரு/திருமதி. க.வசந்தி

மற்றும் ஊராட்சி மன்ற அங்கத்தினர்களும்

பொருள்	தீர்மானம்
திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தொப்பம்பட்டி ஒன்றியம் தும்பலப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட தும்பலப்பட்டி புல எண் : 320/4B-ல் 2.19 ஏக்கர் (8850 சதுரமீட்டர்) பரப்பளவு உள்ள இடத்தில் அரசு விதிகளுக்கு உட்பட்டு துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திண்டுக்கல் அவர்களின் அனுமதி எண் : SWP/DTCP/DINDIGUL/LAYOUT No: 95/2023 நாள் : 15.06.2023-ன்படி வரைபடத்தின் படியும், இடத்தில் உள்ள படியும் 1 முதல் 55 குடியிருப்பு மனைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதை மன்றம் அங்கீகரிக்க.	எண் : 54/2023 அங்கீகரிக்கப்பட்டது K. Vasanthi தலைவர் தும்பலப்பட்டி ஊராட்சி

/உண்மை நகல்/

தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கை

முன்னிலை : திருமதி க.வசந்தி

ந.க.எண் [illegible]/2023-2024:கி.ஊ

நாள் : 30.06.2023

பொருள் : மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - அரசு சட்ட விதிகளின்படி கட்டணங்கள் செலுத்த உத்தரவிட்டல் தொடர்பாக.

பார்வை :
1. திருமதி P.செல்வராணி மனு நாள் :20.06.2023
2. அரசாணை நிலை எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் :04.05.2017
3. அரசாணை நிலை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் :13.10.2017
4. துணை இயக்குனர், மாவட்டநகர் ஊரமைப்பத் துறை அலுவலகம் திண்டுக்கல் ROC NO : IMM 26 JXU நாள் :15.06.2023

உத்தரவு :

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில் கோரியபடி பார்வை (2) மற்றும் (3) ல் காணும் அரசாணையின் படி பழனி தாலுகா தும்பலப்பட்டி ஊராட்சி கிராம புல எண் 320/4B ல் 2.19 ஏக்கர் (8850.00 சதுர மீட்டர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி பார்வை 4-ல் கண்டுள்ளவாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாரு அரசு தலைப்பு மற்றும் ஊராட்சியில் கட்டணங்கள் செலுத்தி அந்த சீட்டு நகலினை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

Scanned with CamScanner

நிலப்பயன் கட்டணம்

வ.எண்	புல எண்	ஏக்கர் /ச மீ	கட்டணம் விதம் ஏக்கர் 1க்கு / ச மீ	செலுத்தப்பட வேண்டிய சந்தை மதிப்பு 3 விழுக்காடு கட்டணம்
1	320/4B	2.19 ஏக்கர் 8850.00 ச மீ	219000	6570

கூராய்வுக் கட்டணம்

2	320/4B	மனைகள் 55	55*1000	55000

கூராய்வுக் கட்டணம் மற்றும் நிலப் பயன்பாட்டிற்க்கான கட்டணம் ஆகியவற்றை தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

K. Vasanthy.
தலைவர்
தும்பலப்பட்டி ஊராட்சி

பெறுநர் :

திருமதி P.செல்வராணி,

w/o P.இராமலிங்கம்,

154/1, லட்சுமிபுரம்,

பழனி-624601.

ஊராட்சி அலுவலகம் தும்பலப்பட்டி பழனி தாலுகா.
தும்பலப்பட்டி

Scanned with CamScanner

தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி க.வசந்தி அவர்கள்

…/2023-2024/து/ஊ ______________________ நாள் 30.06.2023

மனைப்பிரிவு அங்கீகரித்தல் - திண்டுக்கல் மாவட்டம் - பழனி வட்டம் - தோப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் - தும்பலப்பட்டி ஊராட்சி/ கிராமம் - நில அளவு எண் 320/4B -இல் 8850.00 ச.மீ. அல்லது 2.19 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை எண்கள் 1 முதல் 55 மற்றும் (மொத்தம் 55) மனைகளாகப் பிரிக்கப்பட்டு துணை இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல்- தொடர்பாக.

பார்வை :

1. திருமதி P.செல்வராணி என்பவரது மனு நாள் :20/06/2023
2. துணை இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், விண்ணப்ப எண், 1MM 26JXU, நாள் :13.03.2023
3. நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 19799/2020 போ.நாள் 24.12.2020
4. அரசாணை எண் , 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள், 04.06.2004
5. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
6. அரசாணை எண் , 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019, மற்றும் அரசாணை எண் , 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 31.01.2020
7. அரசாணை எண், 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை. UD4(3), நாள் , 23.09.2020
8. அரசாணை எண், 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 09.12..2020
9. அரசு கடிதம் எண் .19113/நவ4(3) / 2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 30.08.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/லிகி1, நாள் 08.09.2017
11. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், விண்ணப்ப எண் IMM 26JXU - நாள் 30.03.2023

Scanned with CamScanner

நிபந்தனைகள் :

1. நகர் ஊரமைப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மணியினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துரையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு வியாபிக்கின்ற வகையில் ஊராட்சி பதவிக்கு குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறுகள், கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைசார்ந்த கட்டிடம் மட்டும் அமைக்கப்பட்ட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவின் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு 6X 4 அளவிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

இணைப்பு
அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்.

Scanned with CamScanner

12. அசல் தான பத்திரம் எண் 1314/2023. நாள் :14.06.2023 மற்றும், TANGEDCO அசல் தான பத்திரம் எண் 1314/2023, நாள் :14.06.2023

13. மனுதார கட்டணங்களை அரசு தலைப்பில் செலுத்திய நாள் :05.07.2023

14. ஊராட்சி மன்ற தீர்மான எண் 54 நாள் :30.06.2023

****

<u>உத்திரவு</u>

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தும்பலப்பட்டி ஊராட்சி // கிராமம் - நில அளவு எண். 320/4B இல் 8850.00 ச.மீ அல்லது 2.19 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை எண்கள் 1 முதல் 55 மற்றும் (மொத்தம் 55 மனைகளாகப் பிரிக்கப்பட்டு SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO : 95/2023 என எண்ணிடப்பட்டு, பார்வை 11-ல் கண்டவாறு ஒப்புதல் வரப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 55 மனைகள் 2.19 ஏக்கர் 8850.00 ச.மீ மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டணங்களை மொத்த பரப்பில் 2875.80 ச.மீ சாலையின் பரப்பு ச.மீ நீங்கலாக மீதமுள்ள மனைகளின் பரப்பிற்கு 5974.20 ச.மீ க்கு ரூ.6570 கூராய்வுக்கட்டணம் ரூ.1000 வீதம் 55 = 55000/- மட்டும் தும்பலப்படி ஊராட்சி கணக்கில் நாள் 05.07.2023 அன்று (பல்வகை ரசீது எண் :7477 நாள் 05.07.2023) மற்றும் நிலப்பயன் மாற்றக் கட்டணம் சந்தை மதிப்பில் 3 சதவீதம் தொகை ரூ.6570/- ஐ உரிய அரசு தலைப்பில் நாள் அன்றும் செலுத்தியுள்ளார். எனவே கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனை எண்கள் 1 முதல் 55 (மொத்தம் 55 மனைகள்) தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற தீர்மான எண் 54/2023 நாள் : 30.06.2023-ன் அடிப்படியில் அங்கீகரித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

K. Vasanthi.

தலைவர்
தும்பலப்பட்டி ஊராட்சி

Scanned with CamScanner

பெறுநர் :

திருமதி P.செல்வராணி,

w/o P.இராமலிங்கம்,

154/1, லட்சுமிபுரம்,

பழனி-624601.

பெறுநர் :

சார்பதிவாளர்,

சார்பதிவாளர் அலுவலகம்,

கீரனூர்,

பழனி தாலுக்கா,

திண்டுக்கல் மாவட்டம்.

Scanned with CamScanner